وَاِنۡ فَاتَكُمۡ شَىۡءٌ مِّنۡ اَزۡوَاجِكُمۡ اِلَى الۡكُفَّارِ فَعَاقَبۡتُمۡ فَاٰتُوا
الَّذِيۡنَ ذَهَبَتۡ اَزۡوَاجُهُمۡ مِّثۡلَ مَاۤ اَنۡفَقُوۡا ؕ وَاتَّقُوا اللّٰهَ الَّذِىۡۤ
اَنۡتُمۡ بِهٖ مُؤۡمِنُوۡنَ ﴿۱۱﴾ يٰۤاَيُّهَا النَّبِىُّ اِذَا جَآءَكَ الۡمُؤۡمِنٰتُ يُبَايِعۡنَكَ
عَلٰٓى اَنۡ لَّا يُشۡرِكۡنَ بِاللّٰهِ شَيۡـًٔا وَّلَا يَسۡرِقۡنَ وَلَا يَزۡنِيۡنَ وَلَا
يَقۡتُلۡنَ اَوۡلَادَهُنَّ وَلَا يَاۡتِيۡنَ بِبُهۡتَانٍ يَّفۡتَرِيۡنَهٗ بَيۡنَ
اَيۡدِيۡهِنَّ وَاَرۡجُلِهِنَّ وَلَا يَعۡصِيۡنَكَ فِىۡ مَعۡرُوۡفٍ فَبَايِعۡهُنَّ
وَاسۡتَغۡفِرۡ لَهُنَّ اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ غَفُوۡرٌ رَّحِيۡمٌ ﴿۱۲﴾ يٰۤاَيُّهَا الَّذِيۡنَ
اٰمَنُوۡا لَا تَتَوَلَّوۡا قَوۡمًا غَضِبَ اللّٰهُ عَلَيۡهِمۡ قَدۡ يَـئِسُوۡا مِنَ
الۡاٰخِرَةِ كَمَا يَـئِسَ الۡكُفَّارُ مِنۡ اَصۡحٰبِ الۡقُبُوۡرِ ﴿۱۳﴾ ع ٢ ٨

## سُوۡرَةُ الصَّفِّ مَدَنِيَّةٌ وَهِىَ اَرۡبَعَ عَشۡرَةَ اٰيَةً وَفِيۡهَا رُكُوۡعَانِ

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ
سَبَّحَ لِلّٰهِ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الۡاَرۡضِ ۚ وَهُوَ الۡعَزِيۡزُ الۡحَكِيۡمُ ﴿۱﴾
يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا لِمَ تَقُوۡلُوۡنَ مَا لَا تَفۡعَلُوۡنَ ﴿۲﴾ كَبُرَ مَقۡتًا
عِنۡدَ اللّٰهِ اَنۡ تَقُوۡلُوۡا مَا لَا تَفۡعَلُوۡنَ ﴿۳﴾ اِنَّ اللّٰهَ يُحِبُّ الَّذِيۡنَ
يُقَاتِلُوۡنَ فِىۡ سَبِيۡلِهٖ صَفًّا كَاَنَّهُمۡ بُنۡيَانٌ مَّرۡصُوۡصٌ ﴿۴﴾

11. உங்கள் மனைவியரிலிருந்து (மதம்மாறி) எவரேனும் உங்களைவிட்டும் நிராகரிப்பவர்கள்பால் தப்பிச்சென்றுவிட்டால், பின்னர் நீங்கள் (அவர்களுடன் போர்செய்து அவர்களிடமிருந்து) போர்ப் பொருள்களை அடைந்தால், எவர்களின் மனைவியர்கள் சென்றுவிட்டனரோ அவர்களுக்கு அவர்கள் செலவு செய்தது போன்றதைக் கொடுத்துவிடுங்கள்; மேலும், எவனை நீங்கள் விசுவாசம் கொண்டுள்ளீர்களோ அத்தகைய அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்.

12. நபியே! "அல்லாஹ்விற்கு எப்பொருளையும் அவர்கள் இணை வைப்பதில்லை என்றும், திருடுவதில்லை என்றும், விபச்சாரம் செய்வதில்லை என்றும், தங்கள் (பெண்) பிள்ளைகளைக் கொலை செய்வதில்லை என்றும், தங்களுடைய கைகளுக்கும் தங்கள் கால்களுக்குமிடையில் எதனை அவர்கள் கற்பனை செய்கிறார்களோ அவ்வாறான அவதூறை இட்டுக்கட்டுவதில்லை என்றும், நன்மையானவற்றில் உமக்கு மாறு செய்வதுமில்லை என்றும் உம்மிடம் வாக்குறுதி (பைஅத்து_) செய்ய விசுவாசிகளான பெண்கள் உம்மிடம் வந்தால், அவர்களுடன் நீர் வாக்குறுதி செய்து கொள்வீராக! இன்னும், நீர் அவர்களுக்காக அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புத் தேடுவீராக! நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், மிகக்கிருபையுடையவன்.

13. விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ் எவர்கள் மீது கோபம் கொண்டுவிட்டானோ அந்த சமூகத்தாரை நீங்கள் நண்பர்களாக எடுத்துக் கொள்ளாதீர்கள். (ஏனெனில்) மண்ணறைவாசிகளைப் பற்றி (அவர்கள் திரும்பி வர மாட்டார்களென) நிராகரிப்போர் நம்பிக்கையிழந்தவாறே, மறுமையைப்பற்றி நிச்சயமாக இவர்கள் நம்பிக்கையிழந்துவிட்டனர்.

---

அத்தியாயம் : 61

## அஸ்ஸஃப் _ அணிவகுப்பு

வசனங்கள் : 14 மதனீ ருகூஃகள் : 2

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்வைத் துதி செய்கின்றன. அவனே (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

2. விசுவாசங் கொண்டோரே! நீங்கள் செய்யாததை ஏன் கூறுகின்றீர்கள்.

3. நீங்கள் செய்யாததை(ப்பிறருக்குச்செய்ய)க் கூறுவது அல்லாஹ்விடத்தில் வெறுப்பால் மிகப்பெரிதாகிவிட்டது.

4. (விசுவாசிகளே!) நிச்சயமாக அல்லாஹ்: ஒன்றோடொன்று இணைந்(து அசையா)திருக்கும் கட்டிடத்தைப் போன்று அணியில் (இருந்து புறமுதுகிடாது) நின்றவர்களாக அவனுடைய பாதையில் யுத்தம் புரிகிறார்களே அத்தகையோரை நேசிக்கின்றான்.

وَ اِذْ قَالَ مُوْسٰى لِقَوْمِهٖ يٰقَوْمِ لِمَ تُؤْذُوْنَنِيْ وَ قَدْ تَّعْلَمُوْنَ اَنِّيْ
رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ ؕ فَلَمَّا زَاغُوْۤا اَزَاغَ اللّٰهُ قُلُوْبَهُمْ ؕ وَ اللّٰهُ لَا يَهْدِي
الْقَوْمَ الْفٰسِقِيْنَ ۵ وَ اِذْ قَالَ عِيْسَى ابْنُ مَرْيَمَ يٰبَنِيْۤ اِسْرَآءِيْلَ اِنِّيْ
رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ مُّصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيَّ مِنَ التَّوْرٰىةِ وَ مُبَشِّرًۢا
بِرَسُوْلٍ يَّاْتِيْ مِنْۢ بَعْدِي اسْمُهٗۤ اَحْمَدُ ؕ فَلَمَّا جَآءَهُمْ بِالْبَيِّنٰتِ قَالُوْا
هٰذَا سِحْرٌ مُّبِيْنٌ ۶ وَ مَنْ اَظْلَمُ مِمَّنِ افْتَرٰى عَلَى اللّٰهِ الْكَذِبَ وَ هُوَ
يُدْعٰۤى اِلَى الْاِسْلَامِ ؕ وَ اللّٰهُ لَا يَهْدِي الْقَوْمَ الظّٰلِمِيْنَ ۷ يُرِيْدُوْنَ
لِيُطْفِـُٔوْا نُوْرَ اللّٰهِ بِاَفْوَاهِهِمْ ؕ وَ اللّٰهُ مُتِمُّ نُوْرِهٖ وَ لَوْ كَرِهَ الْكٰفِرُوْنَ ۸
هُوَ الَّذِيْۤ اَرْسَلَ رَسُوْلَهٗ بِالْهُدٰى وَ دِيْنِ الْحَقِّ لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ
كُلِّهٖ وَ لَوْ كَرِهَ الْمُشْرِكُوْنَ ۹ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا هَلْ اَدُلُّكُمْ عَلٰى تِجَارَةٍ ع ۹ ۱
تُنْجِيْكُمْ مِّنْ عَذَابٍ اَلِيْمٍ ۱۰ تُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَ رَسُوْلِهٖ وَ تُجَاهِدُوْنَ
فِيْ سَبِيْلِ اللّٰهِ بِاَمْوَالِكُمْ وَ اَنْفُسِكُمْ ؕ ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ
تَعْلَمُوْنَ ۱۱ يَغْفِرْ لَكُمْ ذُنُوْبَكُمْ وَ يُدْخِلْكُمْ جَنّٰتٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا
الْاَنْهٰرُ وَ مَسٰكِنَ طَيِّبَةً فِيْ جَنّٰتِ عَدْنٍ ؕ ذٰلِكَ الْفَوْزُ الْعَظِيْمُ ۱۲
وَ اُخْرٰى تُحِبُّوْنَهَا ؕ نَصْرٌ مِّنَ اللّٰهِ وَ فَتْحٌ قَرِيْبٌ ؕ وَ بَشِّرِ الْمُؤْمِنِيْنَ ۱۳

5. மேலும், மூஸா தன் சமூகத்தாரிடம், "என்னுடைய சமூகத்தாரே! நிச்சயமாக நான், உங்கள்பால் அனுப்பப்பட்ட அல்லாஹ்வுடைய தூதனாக இருக்கிறேன் என்பதை நிச்சயமாக நீங்கள் நன்கறிந்தவர்களாக இருக்க, என்னை ஏன் நீங்கள் துன்புறுத்துகிறீர்கள்?" என்று கூறியதை_(நபியே! நீர் நினைவு கூர்வீராக!)பின்னர், (நேர்வழியிலிருந்து) அவர்கள் சறுகிய பொழுது, அல்லாஹ்வும் அவர்களுடைய இதயங்களை (நேர்வழியிலிருந்து) சறுகச்செய்துவிட்டான்; அன்றியும் பாவிகளான சமூகத்தாரை அல்லாஹ் நேர்வழியில் செலுத்த மாட்டான்.

6. மேலும், மர்யமின் புதல்வர் ஈஸா, "இஸ்ராயீலின் மக்களே! எனக்கு முன்னுள்ள தவ்ராத்தை உண்மைப்படுத்தியவனாகவும், எனக்குப் பின்னர் அஹ்மது எனும் பெயருள்ள ஒரு தூதர் வருவார் என நன்மாராயம் கூறுபவனாகவும் நிச்சயமாக உங்கள்பால் (அனுப்பப்பட்ட) அல்லாஹ்வின் தூதராக நான் இருக்கிறேன்" என்று கூறியதை (நபியே! நீர் நினைவு கூர்வீராக) பின்னர், (அவர் கூறியவாறு) தெளிவான அத்தாட்சிகளுடன் அவர்களிடம் (அத்தூதராகிய)அவர் வந்தபொழுது, "இது தெளிவான சூனியம்" என்று அவர்கள் கூறினர்.

7. மேலும் அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டுபவனைவிட மிக அநியாயக்காரன் யார்? அவனோ இஸ்லாத்தின்பால்(அதில் இணைந்துகொள்ள) அழைக்கப்படுகிறான்;மேலும்,(அதனை நிராகரித்த) அநியாயக்கார சமூகத்தாரை அல்லாஹ் நேர்வழியில் செலுத்தமாட்டான்.

8. அல்லாஹ்வின் பிரகாசத்தைத் தம் வாய்களினால் (ஊதி) அணைத்துவிட அவர்கள் நாடுகின்றனர்; நிராகரிப்போர் வெறுத்தபோதிலும், அல்லாஹ்வோ தன்னுடைய பிரகாசத்தைப் பூர்த்தியாக ஆக்கிவைக்கக்கூடியவன்.

9. அவன் எத்தகையோனென்றால், அவன் தன்னுடைய தூதரை நேர்வழியைக் கொண்டும், உண்மையான மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பிவைத்தான்; இணை வைத்துக்கொண்டிருப்போர் வெறுத்த போதிலும்,மற்ற ஏனைய எல்லா மார்க்கங்களைவிட அதை மேலோங்கச் செய்யவே_(தன் தூதரை அனுப்பி வைத்தான்.)

10. விசுவாசங்கொண்டோரே! ஒரு வியாபாரத்தை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? துன்புறுத்தும் வேதனையிலிருந்து அது உங்களை ஈடேற்றும்.

11. (அத்தகைய வியாபாரமாவது:) நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய (இத்) தூதரையும் ஈமான் கொண்டு, உங்களுடைய பொருட்களையும், உங்களுடைய உயிர்களையும் கொண்டு அல்லாஹ்வுடைய பாதையில் அறப்போர் (ஜிஹாது) செய்வீர்கள்; நீங்கள் அறியக்கூடியவர்களாக இருப்பின் இதுவே உங்களுக்கு மிகச் சிறந்ததாக இருக்கும்.

12. (அவ்வாறு நீங்கள் செய்தால்) அவன் உங்களுடைய பாவங்களை உங்களுக்கு மன்னித்துவிடுவான்;மேலும் சுவனங்களில் உங்களைப் பிரவேசிக்கச் செய்வான்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்;மேலும்,(அத்னு எனும்) நிலையான சுவனங்களில் (உள்ள) நல்ல இருப்பிடங்களிலும் (உங்களைப் பிரவேசிக்கச் செய்வான்). அதுவே மகத்தான வெற்றியாகும்.

13. வேறொன்று(மானவியாபாரமு)ம் உண்டு; அதை நீங்கள் விரும்புகிறீர்கள்; (அதுவே) அல்லாஹ்விடமிருந்து உதவியும், சமீபித்து வரும் வெற்றியுமாகும்; இன்னும், (நபியே! இதனைக் கொண்டு) நீர் விசுவாசிகளுக்கு நன்மாராயம் கூறுவீராக.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْۤا اَنْصَارَ اللّٰهِ كَمَا قَالَ عِيْسَى ابْنُ مَرْيَمَ
لِلْحَوَارِيّٖنَ مَنْ اَنْصَارِيْۤ اِلَى اللّٰهِ ؕ قَالَ الْحَوَارِيُّوْنَ نَحْنُ اَنْصَارُ
اللّٰهِ فَاٰمَنَتْ طَّآئِفَةٌ مِّنْۢ بَنِيْۤ اِسْرَآءِيْلَ وَكَفَرَتْ طَّآئِفَةٌ ۚ
فَاَيَّدْنَا الَّذِيْنَ اٰمَنُوْا عَلٰى عَدُوِّهِمْ فَاَصْبَحُوْا ظٰهِرِيْنَ ﴿١٤﴾ ع ٢ ١٠

## سُوْرَةُ الْجُمُعَةِ مَدَنِيَّةٌ وَهِيَ اِحْدٰى عَشْرَةَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

يُسَبِّحُ لِلّٰهِ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ الْمَلِكِ الْقُدُّوْسِ الْعَزِيْزِ
الْحَكِيْمِ ﴿١﴾ هُوَ الَّذِيْ بَعَثَ فِى الْاُمِّيّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ
وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ ۗ وَاِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِيْ ضَلٰلٍ
مُّبِيْنٍ ﴿٢﴾ وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ ؕ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿٣﴾ ذٰلِكَ
فَضْلُ اللّٰهِ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ ﴿٤﴾ مَثَلُ
الَّذِيْنَ حُمِّلُوا التَّوْرٰىةَ ثُمَّ لَمْ يَحْمِلُوْهَا كَمَثَلِ الْحِمَارِ يَحْمِلُ اَسْفَارًا ؕ
بِئْسَ مَثَلُ الْقَوْمِ الَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِ اللّٰهِ ؕ وَاللّٰهُ لَا يَهْدِى الْقَوْمَ
الظّٰلِمِيْنَ ﴿٥﴾ قُلْ يٰۤاَيُّهَا الَّذِيْنَ هَادُوْۤا اِنْ زَعَمْتُمْ اَنَّكُمْ اَوْلِيَآءُ لِلّٰهِ
مِنْ دُوْنِ النَّاسِ فَتَمَنَّوُا الْمَوْتَ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿٦﴾

14. விசுவாசங்கொண்டோரே! மர்யமின் புதல்வர் ஈஸா தன் சீடர்களிடம்: "அல்லாஹ்வின்பால் (அவன் மார்க்கத்திற்காக) எனக்கு உதவி செய்வோர் யார்?" எனக்கேட்க, அச்சீடர்கள் "நாங்கள் அல்லாஹ்வின் உதவியாளர்கள்" எனக்கூறியது போன்று அல்லாஹ்வின் உதவியாளர்களாக நீங்கள் ஆகி விடுங்கள்; (பின்னர்) இஸ்ராயீலின் சந்ததிகளில் ஒரு கூட்டம் விசுவாசம் கொண்டது; மற்றொரு கூட்டமோ நிராகரித்தது; ஆகவே, விசுவாசம் கொண்டிருந்தோரை அவர்களின் விரோதிகளுக்கெதிராக நாம் பலப்படுத்தி (வெற்றியை நல்கி)னோம்; ஆகவே, அவர்கள் வெற்றியாளர்களாக ஆகிவிட்டனர்.

---

அத்தியாயம் : 62

## அல் ஜுமுஆ – வெள்ளிக்கிழமை

வசனங்கள் : 11 மதனீ ருகூஉகள் : 2

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்வைத் துதி செய்கின்றன. (அவன் தான்) பேரரசன்; பரிசுத்தமானவன்; (யாவரையும்) மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்.

2. அவன் எத்தகையவனென்றால், எழுத்தறிவில்லாத (அரபி) சமூகத்தார்களில், அவர்களிலிருந்தே ஒரு தூதரைத் தேர்ந்தெடுத்து அனுப்பிவைத்தான். அவர் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக்காண்பித்து, அவர்களைப் பரிசுத்தமாக்கியும் வைத்து, அவர்களுக்கு வேதத்தையும், தீர்க்கமான அறிவை (சுன்னத்தை)யும் கற்றுக் கொடுக்கின்றார்; நிச்சயமாக, அவர்கள் இதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டில் இருந்தனர்.

3. இன்னும், அவர்களிலிருந்து (தோன்றக்கூடியவர்களும்) இதுவரை அவர்களுடன் சேராத(வர்களும் உலக முடிவுவரை தோன்றக் கூடியவர் களுமான) மற்றுமுள்ளோருக்கும் (தூதராக அவரை அல்லாஹ் அனுப்பி வைத்தான்.) அவனோ யாவரையும் மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்.

4. அது அல்லாஹ்வுடைய பேரருளாகும்; அவன் நாடியவர்களுக்கு அதனைக் கொடுக்கின்றான்; மேலும், அல்லாஹ் மகத்தான பேரருளுடையவன்.

5. "தவ்றாத்"தைச் சுமத்தப்பட்டுப் பின்னர், அதிலுள்ளவாறு செயல்படாதவர்களின் உதாரணம்: ஏடுகளைச் சுமக்கும் கழுதையின் உதாரணத்தைப் போன்றாகும்; அல்லாஹ்வுடைய வசனங்களைப் பொய்யாக்கியவர்களான சமூகத்தாரின் இவ்வுதாரணம் மிகக்கெட்டது; அல்லாஹ்வோ அநியாயக்கார சமூகத்தாரை நேர் வழியில் செலுத்தமாட்டான்.

6. "யூதர்களே! (மற்ற) மனிதர்களன்றி நீங்கள் தான் அல்லாஹ்வின் நண்பர்களென்று நிச்சயமாக நீங்கள் எண்ணிக்கொண்டிருந்தால், (அவ்வெண்ணத்தில்) நீங்கள் உண்மையானவர்களாக இருந்தால் நீங்கள் மரணத்தை விரும்புங்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!